Registration Number of the newspaper - TNMUL/2011/39024- RDis No 358/13

The Voice of Hope
Since 1999
MILLATH
Educational & Charitable Trust
Helping and uplifting the needy
Regd. No. 1668/055
5/1, Habibullah Road, T.Nager, Chennai -17. Ph: 00914 42834 5097

PEACE VOICE
بيس وايس
பீஸ் வாய்ஸ்
MULTILINGUAL MONTHLY

SMASH
FITNESS STUDIO
+91 9841037786 | www.smashfit.in
Lloyds Road, Royapettah, Chennai 600014
TONGUE TINGLERS
+91 8220735528 | www.tonguetinglers.com

VOLUME : 14 - ISSUE - 6 FEBRUARY - 2025 PRICE: RS.30/- CHENNAI

# இஸ்ரேல் - காசா போர் நிறுத்த ஒப்பந்தம் பணயக்கைதிகளை ஒப்படைத்தது ஹமாஸ்

காசா: இஸ்ரேலுக்கும் ஹமாஸுக்கும் இடையில் போர் நிறுத்த ஒப்பந்தம் கையெழுத்தாகியுள்ள நிலையில், இன்று பணயக்கைதிகள் பரிமாற்றம் நடந்திருக்கிறது.

இதன் மூலம் இரு நாடுகளுக்கும் இடையில் அமைதி நீடிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. ஹமாஸ் தரப்பில் 3 கைதிகளும், இஸ்ரேல் தரப்பில் 100க்கும் அதிகமான கைதிகளும் விடுவிக்கப் பட்டிருக்கின்றனர். Also Read 'சாமி'களை வைத்து 'மணி'க்கு செக்! கொங்கில் வேலையை ஆரம்பித்த எடப்பாடி! இது புது ட்விஸ்டால்ல இருக்கு! தொடக்கத்தில் பாலஸ்தீனத்தின் ஒரு பகுதியாகத்தான் இஸ்ரேல் இருந்தது. பின்னர் கொஞ்சம் கொஞசமாக ஆக்கிரமித்த அவர்கள், இப்போது பாலஸ்தீனம் என்று ஒரு நாடே இல்லாத அளவுக்கு அதை சுருக்கியிருக்கிறார்கள். கடந்த ஆண்டு அக்டோபர் மாதம்



ஆக்கிரமிப்பு நடவடிக்கைக்கு எதிராக பாலஸ்தீன விடுதலை அமைப்பான ஹமாஸ், இஸ்ரேல் மீது தாக்குதல் நடத்தியது. இது ஒரு பெரிய போரை தொடங்கி வைத்திருக்கிறது.

இந்த போரில் ஹமாஸை ஒழிப்பதாக கூறி, 42,000க்கும் அதிகமான பொதுமக்களை இஸ்ரேல் கொன்று குவித்தது. காசா எனும் துண்டு நிலம் கடுமையாக பாதிக்கப்பட்டிருக்கிறது. போர் நிறுத்தம் குறித்து சீனாவும், ரஷ்யாவும் வலியுறுத்தியும் கூட, அமெரிக்காவை வைத்து இஸ்ரேல் தப்பித்துக் கொண்டது. கடைசியாக ஐநா சபையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு போர் நிறுத்தம் செய்யப்பட்டிருக்கிறது. போர் நிறுத்தத்தை ஒட்டி இரு நாடுகளும் பணயக் கைதிகளை விடுவித்து வருகின்றனர்.

ஹமாஸ் 3 இஸ்ரேலியர்களை விடுவித்திருக்கிறது. பதிலுக்கு, இஸ்ரேல் நூற்றுக்கும் அதிகமான பாலஸ்தீனர்களை விடுவித்திருக்கிறது. இது ஒருபுறம் இருக்க மறுபுறம், காசாவை நாங்கள் வாங்குகிறோம் என அமெரிக்கா புதிய சர்ச்சையை கையில் எடுத்திருக்கிறது. Recommended For You "அப்பாவின் பெட்டியில் பழைய ரூ.500 நோட்டு.. அதன் மதிப்பை கேட்டதும் ஆடிப்போன இளைஞர்! கடைசியில் ஷாக் " காசாவில் உள்ள மக்களை எகிப்துக்கும் ஜோர்டனுக்கும் அனுப்பிவைத்துவிட்டு, காசா நிலப்பரப்பை நாங்கள் வாங்கி டெவலப் செய்கிறோம் என்று டிரம்ப் பேசியிருந்தார்.

இதற்கு அமெரிக்காவின் எதிரி நாடுகள் மட்டுமல்லாது, அதன் நட்பு நாடுகளே கடும் கண்டனம் தெரிவித்து வருகின்றன. டிரம்ப் பேசுவதை போல, சீனா மற்றும் ரஷ்ய அதிபர்கள் இப்படி பேச தொடங்கினால் என்ன நடக்கும்? மூன்றாம் உலகப்போர் வெடிக்காதா? என்று கேள்வி எழுப்பியுள்ளனர். போர் நிறுத்த ஒப்பந்தத்தின்படி, மருத்துவ உதவிக்கான வாகனங்கள் 12,000 காசாவுக்குள் அனுமதிக்கப்பட வேண்டும்.

ஆனால் இப்போது வரை 8500தான் அனுமதிக்கப் பட்டிருக்கிறது. தினமும் 50 பெட்ரோல், டீசல் டேங்கர்கள் அனுமதிக்கப்பட வேண்டும். 15 என்கிற எண்ணிக்கையில்தான் இவை அனுமதிக்கப்படுகின்றன.

தற்காலிக வீடுகள் 60,0000 உருவாக்கப்பட வேண்டும். ஆனால் இதுவரை ஒன்றுகூட அமைக்கப்படவில்லை. குடிசைகள் 2 லட்சம் தேவை. ஆனால் வெறும் 20,000 மட்டுமே அமைக்கப்பட்டிருக்கின்றன. Advertisement இதெல்லாம் பாலஸ்தீன மக்களுக்கு கடுமையான மன உளைச்சலை ஏற்படுத்தியுள்ளது என சர்வதேச அரசியல் விமர்சகர்கள் கூறி வருகின்றனர்.




# எப்போதோ இறந்துபோன பெரியார் இப்போதும் ஏன் தொடர்ந்து தாக்கப்படுகிறார்.... ?

எப்போதோ இறந்துபோன பெரியார்
இப்போதும் ஏன் தொடர்ந்து தாக்கப்படுகிறார்.... ?
நீங்கள் என்றாவது சிந்தித்ததுண்டா? தேர்தல் களத்தில் எம்ஜிஆர், ஜெயலலிதா, விஜய் போல் பெரியார் மக்களிடத்தில் ஒரு வசீகரத் தலைவரும் இல்லை.

இன்னும் சொல்லப்போனால்... பெரும்பாலான வாக்காளர்களுக்குப் பெரியாரை யார் என்றே தெரியாது. அரைகுறை படிப்பாளிகளுக்குக்கூட அவர் ஒரு கடவுள் மறுப்பாளர் என்பதைத் தவிர வேறொன்றும் தெரியாது.

இப்படி இருந்தும் பெரியார் ஏன் இப்போது தொடர்ந்து தாக்குதலுக்கு உள்ளாக்கப் படுகிறார்... ?



இது சித்தாந்தம் தொடர்பான ஒரு மறைமுகப் போர். ஏழாம் அறிவு படத்தில் டாங்லி யோட கண்களால் கட்டுப்படுத்த முடியாத ஒருவர் ( சூரியா) வரும்போது டாங்லியின் குரு சொல்வார், "அங்கே இருக்காதே அது போதி தர்மர் மண் உடனே கிளம்பி விடு" என்று.

அப்படித்தான்.... இந்தியாவில் எந்த ஒரு மாநிலத்தின் அரசியலையும் வளைக்கக் கூடிய சக்திவாய்ந்த ஓர் இயக்கம், ஓர் அரசியல் கட்சி தேர்தல் அரசியலில் நோட்டாவோடு போட்டிப் போடுவது இந்த மண்ணில் மட்டும்தான்.

பெரியார் யாரென்று உங்களுக்குத் தெரியாமல் இருக்கலாம். ஆனால்....
இந்திய விடுதலையின்போது பின்தங்கிய மாநிலமாக இருந்த தமிழ்நாட்டை ஒரு முன்னேறிய மாநிலமாக மாற்றுவதற்கு உதவிய ... காமராசர், அண்ணா கருணாநிதி, எம்ஜிஆர், ஜெயலலிதா என்று எல்லா முதல்வர்களுக்கும் பெரியார் யாரென்று நன்றாகவே தெரியும்.

## இந்திய யூனியன் முஸ்லிம் லீக் மகளிர் அணி மாநில பொதுக் குழு கூட்டம்!.. மாநில நிர்வாகிகள் தேர்வு செய்யப்பட்டனர்!.

திருச்சி பிப்ரவரி 18: இந்திய யூனியன் முஸ்லிம் லீக் சார்பு அமைப்பான முஸ்லிம் விமன்ஸ் லீக் மாநில பொதுக்குழு கூட்டம் மீனாட்சி திருமண மஹாலில் 16/02/2025 அன்று விமன்ஸ் லீக் தேசியத் தலைவர் பாத்திமா முசாபர் தலைமையில் நடைபெற்றது. மாநில, மாவட்ட நிர்வாகிகள் முன்னிலை வகித்தனர்.

மதரஸா ஆலிமா ரஜப் நிஷா கிராஅத் ஓதி நிகழ்ச்சியை துவக்கி வைத்தார்கள். விமன்ஸ் லீக் மாநில பொதுச் செயலாளர் வழக்கறிஞர் ஆயிஷா வரவேற்புரையாற்றி பொதுக் குழுவின் நோக்கம் குறித்து விரிவாக எடுத்துரைத்தார்கள். மாநில அமைப்புக் குழு உறுப்பினர் முனைவர் ஃபைரோஸ் நிகழ்ச்சியை தொகுத்து வழங்கினார்கள்.

இந்த பொதுக்குழு கூட்டத்தில் சென்னை ஜெய்தூன்,கோவை மெஹர்நிஷா, தூத்துக்குடி மும்தாஜ், விழுப்புரம் ஆயிஷா, சென்னை ஆயிஷா மாலிக்,தென்காசி சபூரா, பேகம் மதுரை பாத்திமா நிஷா,தஞ்சை ஷமீம் ,சென்னை நாஹிதா, திருவண்ணாமலை ஷபானா,கடலூர் சர்மிளா, அய்யம்பேட்டை சமீமா பேகம்,திருச்சி ஆரிஃபா,தர்மபுரி ஆயிஷா,எமனேஸ்வரம் காமிலா பேகம்,ரவண சமுத்திரம் பரீதா ஆகியோர் கருத்துரை வழங்கினார்கள்.

அதனைத் தொடர்ந்து விமன்ஸ் லீக் தேசியத் தலைவரும் மாமன்ற உறுப்பினருமான பாத்திமா முசாபர் மகளிர் அணியின் செயல்பாடுகள் குறித்தும் அடுத்த கட்ட செயல் திட்டங்கள் குறித்தும் விரிவாக எடுத்துரைத்தார்கள்.

நிறைவாக இன்றைய யூனியன் முஸ்லிம் லீக் தேசிய தலைவர் பேராசிரியர் காதர் மொகிதீன்,மாநில பொதுச் செயலாளர் முகமது அபூபக்கர் பொருளாளர் ஷாஜகான் ஆகியோர் சிறப்பு அழைப்பாளர்களாக கலந்து கொண்டு புதிதாக அறிவிக்கப்பட்ட மாநில மகளிர் அணியின் நிர்வாகிகளை வாழ்த்தி வாழ்த்துரை வழங்கினார்கள்.

திருச்சி தெற்கு மாவட்ட மகளிர் அணி செயலாளர் ஆயிஷா தீர்மானம் வாசிக்க துணைச் செயலாளர் ரெஜினா பேகம் நன்றி உரையாற்றினார்.

இந்த பொதுக்குழுவிற்கான ஏற்பாடுகளை மாவட்ட பொருளாளர் ஜீனத் பேகம் மற்றும் திருச்சி தெற்கு மாவட்ட விமன்ஸ் லீக் நிர்வாகிகள், சென்னை மேற்கு மாவட்ட செயலாளர் முசாபர் அஹமத்,திருச்சி காஜா நகர் பிரைமரி வார்டு தலைவர் பைசூர் ரஹ்மான் மாவட்ட துணை தலைவர் அலாவுதீன் மற்றும் மாணவர் அணி நிர்வாகிகள் சிறப்பான முறையில் ஏற்பாடு செய்திருந்தனர்.

**விமன்ஸ் லீக் மாநில நிர்வாகிகள் விபரம்:**

மாநிலத் தலைவர் ஹாஜியாணி பாத்திமா முசாபர் பொதுச் செயலாளர் வழக்கறிஞர் ஆயிஷா பொருளாளர் ஹாஜியாணி ஜைதூன் முதன்மை துணை தலைவர் ஹாஜியாணி மெகர் நிஷா, துணை தலைவர்கள் ஹாஜியாணி மும்தாஜ், ஆயிஷா,ஆயிஷா மாலிக் மாநில செயலாளர் முனைவர் ஃபைரோஸ், சபுரா பேகம்,பாத்திமா நிஷா,சமீம் மண்டல ஒருங்கிணைப்பு செயலாளர்கள் சபானா, சர்மிளா,சமீமா பேகம், ஆரிபா,ஆயிஷா,காமிலா பேகம்,பரிதா ஆகியோர் தேர்வு செய்யப்பட்டுள்ளனர்.





## திருமுல்லைவாசலில் புதிய வக்த் பள்ளிவாசல் திறப்பு விழாவில் அ.ச.பாத்திமா முசப்பர் சிறப்புரை





## ‘தேர்தல் முடிவுகளுக்கு கட்சி நிர்வாகிகளே பொறுப்பு’ : கார்கே

புதுடில்லி: ‘‘ வருங்காலத்தில் தேர்தலில் கட்சிக்கு தோல்வி ஏற்பட்டால், அதற்கு நிர்வாகிகளே பொறுப்பு ஏற்க வேண்டும்,’’ என காங்கிரஸ் தலைவர் கார்கே கூறியுள்ளார். இது தொடர்பாக கார்கே கூறியதாவது: கட்சி கொள்கைகளில் உறுதியாக இருப்பவர்களை ஊக்குவிக்க வேண்டும். கட்சியை பலவீனப்படுத்தும் வகையில் ஓடிப்போனவர்களிடம் இருந்து தள்ளி இருக்க வேண்டும். எதிர்காலத்தில் தோல்வி ஏற்பட்டால், கட்சி நிர்வாகிகளே பொறுப்பு ஏற்க வேண்டும்.

அமெரிக்காவில் இருந்து வெளியேற்றப்படும் இந்தியர்கள் அவமானப்படுத்தப்படுவதை பிரதமரால் தடுக்க முடியவில்லை. இந்தியாவிற்கு அவப்பெயரை ஏற்படுத்தும் வகையில் நமது பொருட்களுக்கு அமெரிக்கா வரி விதிப்பதை தடுக்க மோடி தவறி விட்டார்.

கட்சியிடம் போதுமான நிதி வசதி இல்லாத சூழ்நிலையிலும் டில்லியில் கடுமையாக போராடினோம். கட்சியை முக்கிய எதிர்க்கட்சியாக மாற்ற நிர்வாகிகள் உழைக்க வேண்டும். இவ்வாறு கார்கே கூறினார்.





## வக்ஃப் சொத்து என்பது...

நாடு முழுக்க உள்ள பொதுப் பள்ளிவாசல்கள், அவற்றின் கப்ர்ஸ்தான்கள் உள்ளிட்ட நிலங்கள் மற்றும் கட்டிடங்கள், தர்ஹாக்கள், அவற்றின் சொந்தமான நிலங்கள் மற்றும் கட்டிடங்கள், மதரசாக்கள் அவற்றின் சொந்தமான நிலங்கள் மற்றும் கட்டிடங்கள், யத்தீம் கானா எனப்படும் முஸ்லிம்களின் அனாதை இல்லங்கள் அவற்றின் சொந்தமான நிலங்கள் மற்றும் கட்டிடங்கள்... முஸாஃபர் கானா எனப்படும்... முஸ்லிம்களின் பயணியர் தங்கும் விடுதிகள் அவற்றின் சொந்தமான நிலங்கள் மற்றும் கட்டிடங்கள்.... ஆகியன.

இவை எல்லாம் பல நூற்றாண்டுகளாக இறை வழியில்... பொது மக்களுக்கு பயன்பட வேண்டும் என்று... பள்ளிவாசல், மதரஸா, தர்ஹா, யதீம்கானா, முஸாஃப்ர் கானா... உள்ளிட்டவற்றுக்கு செல்வந்தர்களால் தானம் கொடுக்கப்பட்டவை.

குறைந்தது 2.5% முதல்... 20% வரை ஜகாத்... மற்றும் ஸதகாவுக்கு 33% உச்சவரம்பு நியமித்த இஸ்லாமிய மார்க்கத்தில்... தன் சொத்தில் 3ல் 1 பங்கை தானம் செய்த பணக்காரர்கள் ஏராளம். அப்படி சேர்ந்த சொத்துகள் எல்லாம்... அனைத்தும் முறைப்படுத்தப்பட்டு பிரிட்டிஷ் ஆட்சியில் “வக்ஃப் போர்டு” என்கிற ஓர் அமைப்பின் கீழ்.. 1913 ஆம் ஆண்டு... சட்டப்பூர்வமாக கொண்டு வரப்பட்டு அரசால் ஆவண ப்படுத்தப்பட்டன.

ஒருவர் தன் சொத்தை “வக்ஃப் சொத்து” என்று தானம் கொடுத்து விட்டால்... அதை வக்ஃப் போர்டில் உள்ள யாரும்... பிறருக்கு விற்கவோ... பிறர் அதை வாங்கவோ... பிறர் தன் பெயரில் பத்திரப்பதிவு செய்து பட்டா போட்டுக்கொள்ளவோ முடியாதபடி... இஸ்லாமிய மார்க்கத்தில் அதுதான் வக்ஃப் சொத்தின் பராமரிப்பு நியதி என்பதால்... 1923ல் வக்ஃப் சட்டம் மூலம் அனைத்து சொத்துகளும் தெளிவாக வக்ஃப் வாரியம் அமைக்கப்பட்டு அதன் மூலம் பராமரித்து பாதுகாக்கப் பட்டவை.

பிற்காலத்தில்... அவற்றை வக்ஃப் வாரியத்திடம் கெஞ்சி கூத்தாடி ‘நல்ல விஷயத்துக்கு... மக்களின் பயனுக்காக... நாட்டு நலனுக்காக...’ என்று கூறி வாடகைக்கு அல்லது குத்தகைக்கு எடுப்பது... பிறகு சுய வணிக இலாபத்துக்கு மாற்றுவது... வக்ஃப் வாரியம் கேட்டால்... ஆட்சி அதிகார பலத்தால்... சொத்தை காலி செய்யாமல் பல்லாண்டுகாலம் அரசையும் கோர்ட்டையும் பாக்கெட்டில் போட்டுகொண்டு இழுத்தடிப்பது... ஒப்பந்தத்தை மீறி வக்ஃப் நிலத்தில் வானாளவிய கட்டிடங்கள் எல்லாம் கட்டி ஆக்கிரமிப்பது... (நம் நாட்டிலேயே மிகப்பெரிய கோடீஸ்வரர் ஒருவரின் அதிக விலை மதிப்புள்ள அடுக்குமாடி மும்பை வீடு கூட... ஒரு முஸ்லீம் கப்பல் ஓனர் வக்ஃப் போர்டுக்கு தானம் செய்த ‘யதீம்கானா’ என்கிற அனாதை இல்ல வக்ஃப் நிலத்தில் கட்டப்பட்டதுதான். அந்த வழக்கு பல ஆண்டுகளாக இன்னும் கோர்ட்டில் தீர்ப்பு கூறப்படாமல் உள்ளது. பாஜகவின் சட்டத்திருத்தம் அமலுக்கு வந்த உடனே தீர்ப்பு அளிக்கப்படலாம்.) என்று... இப்படி வக்ஃப் சொத்துகளில் வஞ்சக ஏமாற்று மோசடிகள் இந்நாட்டில் ஏராளம்... ஏராளம்..!

வக்ஃப் சட்டத்தில்...

மொத்தம் 44 திருத்தங்களை மேற்கொள்ளும் ஒன்றிய பாஜக அரசு... அவை அத்தனையையும் கொண்டு முஸ்லிம்களின் சொத்துகளை அவர்களிடம் இருந்து திருடி பறித்து தன் பெயரில் பத்திரப்பதிவு செய்து பட்டா போட்டுக்கொள்ளத்தான் கொண்டு வருகிறது என்பதை தலைக்குள் மூளை உள்ள எவரும் எளிதாக புரிந்து கொள்ள முடியும்.

இதோ... வக்ஃப் சட்டத்திருத்த மசோதாவில் உள்ள சில திருத்தங்கள் பற்றி திமுக எம்பி சகோ.எம்.எம். அப்துல்லா இந்த காணொலியில் தெளிவாக கூறுகிறார். அதனை பார்த்து விடுங்கள்.

பல நூற்றாண்டுகளாக பள்ளிவாசலாக இருந்து வகஃப் வசம் உள்ள ஒரு சொத்தை...”இது என் சொத்து” என்று நீங்கள் கேட்டால்... உடனே, “இது எங்கள் வக்ஃப் சொத்து இல்லை” என்று வக்ஃப் வாரியமே கூறிவிட்டால்... அந்த சொத்து உங்கள் சொத்து ஆகிவிடும்... என்பதை நீங்கள் அந்த வீடியோவை பார்த்து புரிந்து கொள்வீர்கள்.

இன்னும் பல ஆபத்தான திருத்தங்களில்... முக்கியமானவை சில... உள்ளன.

வக்ஃப் சொத்துகள் என்பவை... முஸ்லிம்கள் மட்டும் தானம் கொடுத்து வக்ஃப் வாரியத்தில் சேர்ந்தவை அல்ல. முஸ்லிம் அல்லாதவர்களும் தானம் கொடுத்துள்ளனர்.

அந்த காலத்தில்... முஸ்லீம் மன்னர்கள் கோயில்களுக்கு தானம் கொடுத்த நிலங்கள்... பல்லாயிரம் ஏக்கர்கள் என்று ஏராளம். (ஒவ்வொரு மாநிலத்திலும் இந்து சமய அறநிலையத்துறை தனித்தனியாக உள்ளன. வக்ஃப் போர்டு போல... இந்திய அளவில் அவை ஒரே அமைப்புக்குள் வந்தால்... உலகிலேயே அதிக சொத்துகள் கொண்ட அமைப்பாக இந்து சமய அறநிலையத்துறை தான் இருக்கும்)

அவ்வாறு... இந்து மன்னர்களும் பள்ளிவாசல் கட்ட... தர்ஹா கட்ட என்று முஸ்லிம்களுக்கு அன்பளிப்பாகவும்... தானமாகவும்... கொடுத்த சொத்துகள் உண்டு.

உதாரணமாக... நாகூர் அவுலியாவின் சிகிச்சையால் நோய் நிவாரணம் பெற்றதற்காக... தஞ்சாவூர் மன்னர் அன்பளிப்பாக கொடுத்த பல ஏக்கர் நிலத்தில்... நாகூர் தர்ஹா உள்ளது போல..!

இதில் புதிய சட்டத் திருத்தம் என்ன கூறுகிறது..?

‘முஸ்லிம் அல்லாதவர்கள் தானம் கொடுத்தவை... வக்ஃப் சொத்துகள் ஆக கருதப்படாது’ என்று...! ஆனால்... இன்றைக்கும் ‘முஸ்லிம்கள் கோயிலுக்கு நிலத்தை தானம் செய்தால் அது கோயில் சொத்தாக கருதப்படும்: என்கிறது இந்து சமய அறநிலையத்துறை சட்டம்.

அடுத்து... இன்னொரு பயங்கரம்... பல வக்ஃப் சொத்து களில்... அரசு மற்றும் தனியார் அலுவலகங்கள் வணிக மையங்கள் எல்லாம் நடக்கின்றன. இது அரசு சொத்தா... வக்ஃப் சொத்தா... என்று பாஜக ஆளும் மாநிலங்களில் உள்ள... வக்ஃப் வாரியத்தில் 11ல் 8 உறுப்பினர்கள் சங்கிகள் எனில்... வக்ஃப் வாரியமே கூறிவிடும்... அது வக்ஃப் சொத்துகள் இல்லை... பாஜகவினரின் சொத்து” என்று.

ஆனால்... எதிர்க்கட்சிகள் ஆளும் மாநிலங்களில் எப்படி... அதுபோல கூற வைப்பது..? அங்கே...வக்ஃப் வாரியத்தில் 11ல் 9பேர் முஸ்லிம்கள் இருப்பார்களே..?!

அதற்குத்தான் அடுத்த பயங்கரமான சட்டத் திருத்தம்.... இது வக்ஃப் சொத்தா... பாஜகவினரின் சொத்தா... என்று ஒரு நிலப் பிரச்சினை ஏற்பட்டால்... அந்த மாவட்டஆட்சியர்... “அது வக்ஃப் சொத்து இல்லை... பாஜகவின் சொத்து” கூறிவிட்டால் போதும். ஆக... இனிமேல்... எதிரிக்கட்சிகள் ஆளும் மாநிலங்கள் அனைத்திலும்.... சங்கி ஐஏஎஸ் அதிகாரிகள் மட்டுமே நியமனம் செய்யப்படலாம். அவர்கள் மூலம் நிலங்கள் கொள்ளையடிக்கப்படலாம். ஐஏஎஸ்... இன்டெர்வியூவிலேயே... இந்த டீலிங் போடப்படலாம். ஒப்புக்கொண்டால்... பாஸ்... என்று நிலைமை கூட ஏற்படலாம். இன்னொரு பயங்கரமான சட்டத்திருத்தம்...

காணொலியில் திமுக எம்பி கூறியபடி...பாஜக ஆளும் மாநில வக்ஃப் வாரியத்தில்.... இனிமேல்... 11ல் 3 பேர் மட்டுமே முஸ்லிம்கள் இருப்பார்கள். அந்த 3 பேரில் இனி “வேலூர் இப்ராஹிம்களுக்கு இடம் கிடைக்கும்“ என்று நீங்கள் கருதலாம். ஆனால்... அதற்கும் ஆப்பு வைக்கிறது ஒன்றிய பாஜக அரசு. இதற்கு முன்பு... சுன்னா - ஷியா பிரிவினர் மட்டுமே வக்ஃப் வாரிய உறுப்பினர்கள் ஆக முடியும் என்கிற சட்டத்தை திருத்தி... அந்த 3 பேரில்.... போஹ்ரா, அஹமதியா, காதியானி ஆகியோரையும் நியமிக்கலாம் என்கிறது சட்டத்திருத்தம். இம்மூவரிடம்... இந்நாட்டில் விரல் விட்டு எண்ணிவிடக்கூடிய அளவில் மட்டுமே பள்ளிவாசல்கள் மதரஸாக்கள் உள்ளன. இவர்கள் எப்படி கோடிக்கணக்கான சுன்னத் வல் ஜமாஅத்தினரின் பள்ளிவாசல்களை நிர்வாகம் செய்ய இயலும்..? என்கிற கேள்வி எல்லாம் இங்கே தேவையே இல்லை.

காரணம்... சட்டத்திருத்த நோக்கம் நிர்வகிப்பது அல்ல. சொத்துகளை கொள்ளையடிப்பது. ஆகவே... இதில் முக்கியமான அம்சம்... குஜராத்தில் உள்ள அந்த 3 பிரிவினரும்... பக்கா பாஜக ஆதரவாளர்கள். தேர்தலுக்கு தேர்தல் மோடியோடு கொஞ்சி குலாவி போஸ் கொடுப்போர். ஆக....இவர்கள் மூலமாக.... 11க்கு 11 என்று பாஜக வக்ஃப் வாரியத்தில் அமோகமாக இடம் பெற்று விடும்..! வக்ஃப் சொத்துகளை இனி வக்ஃப் வாரியமே... சங்கிகளுக்கு இலவசமாக பட்டா போட்டு கொடுத்து விடும்.

இப்படியொரு... சட்டப் பூர்வ நிலக்கொள்ளை. அதிகார ப்பூர்வ சொத்துக்கொள்ளை... பாலஸ்தீனில் கூட நடக்க வில்லை..!






520 முஸ்லிம் தனியார் அரசு உதவி பெறும் கல்வி நிறுவனங்களின் கூட்டமைப்பான ஓமியத் OMEIAT Organisation of Muslim Educational Institutions Associations of Tamilnadu ஐம்பதாவது ஆண்டு பொன்விழா நிகழ்வினை மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு.உதயநிதி ஸ்டாலின் அவர்கள் துவங்கி வைத்து வாழ்நாள் சாதனையாளர்கள் விருதுகளை 31/01/25 அன்று இராயப்பேட்டை புதுக கல்லூரி அரங்கத்தில் நடந்த கோலாகல விழாவில் வழங்கினார். இந்நிகழ்வில் உயர் கல்வித்துறை மாண்புமிகு அமைச்சர் திரு. கோவி செழியன், தமிழ்நாடு வக்பு வாரிய தலைவர் திரு நவாஸ் கனி MP, தமிழ்நாடு ஹஜ் கமிட்டி தலைவர் திரு அப்துல் சமத் MLA, மாமன்ற உறுப்பினர்கள், கல்வியாளர்கள், புரவலர்கள், மாணவர்கள் 2000க்கும் மேற்பட்டவர்கள் பெருந்திரளாக கலந்து கொண்டார்கள். ஓமியத் அமைப்பின் ஒருங்கிணைப்பாளராக இந்த நிகழ்ச்சிகளை நான் தொகுத்து வழங்கினேன் என்பதை பணிவன்புடன் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**எப்போதோ இறந்துபோன பெரியார்**
**1ம் பக்கம் தொடர்ச்சி:**

அந்த முதல்வர்களின் கொள்கைத் தலைவர் பெரியார்தான் என்பதும் அவர்களே விரும்பி ஏற்றுக் கொண்ட ஒரு வெளிப்படையான உண்மை. காங்கிரஸ், திமுக, அதிமுக, கட்சிகள் மட்டும் அல்லாமல்... மதிமுக, தேமுதிக, பாமக, விசிக, மக்கள் நீதி மய்யம் இப்போது உருவான, விஜய் கட்சியான தவெக வரை தங்கள் கட்சியின் கொள்கைத் தலைவராக விரும்பி ஏற்றுக் கொண்ட ஒரே தலைவர் பெரியார்தான்.

பெரியாரியம் என்பது வெறும் கடவுள் மறுப்பு மட்டுமே என்று நீங்கள் நினைத்தால் நீங்கள் இன்னும் சிந்திக்கத் தொடங்கவில்லை என்று பொருள். பெரியாரியம் என்பது எல்லார்க்கும் எல்லாம் என்பதான ஒரு சமத்துவ, சமதர்ம சித்தாந்தம். நடுவண் அரசின் பட்ஜெட்டில் தமிழ்நாட்டைவிட அதிகநிதி ஒதுக்கியும்

வட மாநிலங்கள் முன்னேறாமல் இருப்பதற்குக் காரணம் என்ன? அங்கே சித்தாந்தம் மாறாமல் வளர்ச்சி இருக்காது என்பதை நீங்கள் ஆழமாக யோசிக்காமல் புரிந்து கொள்ள முடியாது. அங்கே ஏழைகளுக்கு ஒதுக்கும் நிதி ஏழைகளுக்குப் போய்ச் சேராது.
சேரவும் விட மாட்டார்கள்.

தொடர்ந்து ஏழைகளாக இருப்பது தங்கள் தலைவிதி என்று தலைவிதியை நம்புகிற கூட்டம் அங்கே அதிகம். இங்கே அப்படி இல்லை. ஏன் என்று கேள்வி கேட்கும் கூட்டம் இங்கே அதிகம். நமது தமிழ் மண்ணில் சாதி, மத, ஆண் பெண் வேறுபாடு என்று எந்த உயர்வு தாழ்வுக்கும் இடமில்லை. கண் போலக் காக்கும் பயிரில் களையும் இருப்பது போல இங்கே சில குறைகளும் உண்டு. களைகள் அவ்வப்போது களையப் படுகிறது. ஆனால்....

பெரியாரிய சிந்தனைகளுக்கு எதிராக அவர்கள் கட்டமைக்க நினைக்கும் சித்தாந்தம் என்ன? உங்களிடம் ஒன்று கேட்கிறேன். பெரியார் வேண்டாம் பெரியாரிசம் வேண்டாம். சரி.... அதற்குப் பதிலாக நீங்கள் கட்டமைக்க விரும்பும் கொள்கை எது ?

உங்களால் அதுபற்றி விவாதிக்க முடியுமா? அல்லது உங்களைப் பின்புலத்தில் இருந்து மறைமுகமாக இயக்குபவர்கள்.... வெளிப்படையாக வெளியேவந்து தமிழ்நாட்டில் பெரியாரியத்துக்குப் பதிலாக அவர்கள் அமைக்க விரும்பும் அந்த சித்தாந்தம் எது என்று வெளிப்படையாகக் கூற முடியுமா? முடியாது.

உலகில் வெற்றிடம் என்று எதுவும் இல்லை. தமிழ்நாட்டில் பெரியாரியத்தை வெளியேற்ற நினைப்பவர்கள் அதற்குப் பதிலாக எந்த சித்தாந்தம் இங்கே வரவேண்டும் என்கிற தகவலையும் வெளியிடுங்கள்.

பெரியார் தனிமனிதர் இல்லை. யாதும் ஊரே யாவரும் கேளிர் என்று கூறிய கணியன் பூங்குன்றன். பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் என்று கூறிய திருவள்ளுவர் மதமெனும் பேய் என்னைப் பிடியாதிருக்க வேண்டும் என்று கூறிய வள்ளலார் இந்தத் தமிழ்ப் பாராம்பரியத்தின் கடைசி முகம்தான் பெரியார். முகம் இல்லாமல் முகவரி இல்லை... எது உங்கள் முகம்...

# آرگنائزیشن آف مسلم ایجوکیشن انسٹی ٹیوٹس اینڈ اسوسی ایشنس آف تمل ناڈو OMEIAT کی گولڈن جوبلی تقریب منائی گئی




چنئی۔(پریس ریلیز) آرگنائزیشن آف مسلم ایجوکیشن انسٹی ٹیوٹس اینڈ اسوسی ایشنس آف تمل ناڈو (OMEIAT) کی گولڈن جوبلی تقریبات کا انعقاد چنئی کے اپوپیٹ نیو کالج میں 31 جنوری تا یکم فروری 2025 دو روزہ منعقد ہوا۔ جس میں تمل ناڈو ڈپٹی چیف منسٹر ادھیانیدی اسٹالن نے مہمان خصوصی کے طور پر شریک ہو کر تقریبات کا افتتاح کیا۔ تقریب میں انجمن کی جانب سے انہوں نے 12 اسلامی اسکالرز سمیت 13 شخصیات کو لائف ٹائم اچیومنٹ ایوارڈز پیش کیے اور کلیدی تقریر کی۔ ادھیانیدی اسٹالن نے اپنی تقریر میں کہا کہ مجھے آج فیڈریشن آف اسلامک ایجوکیشنل انسٹی ٹیوشنز کی گولڈن جوبلی سالگرہ کی تقریبات کا افتتاح کرتے ہوئے بہت فخر اور خوشی ہے۔ میں معزز ممبر قانون ساز اسمبلی اور ایم ایم کے کے رہنما جواہر اللہ اور اس تنظیم کے تمام عہدیداران کا شکریہ ادا کرنا چاہتا ہوں کہ انہوں نے مجھے گولڈن جوبلی کی سالگرہ کے تاریخی پروگرام میں شرکت کا موقع دیا۔ اہم بات یہ ہے کہ میں نے ہر سال اسی نیو کالج میں رمضان کے پروگرام میں شرکت کی ہے۔ یہی نہیں، اسکول سے فارغ ہونے کے بعد میں نے پہلا کالج جس میں اپلائی کیا وہ نیو کالج تھا۔ یہ بات بہت سے لوگ نہیں جانتے۔ میں نے اپنی درخواست کے لیے یہاں انٹرویو میں بھی شرکت کی۔ لیکن، جیسے ہی مجھے لویولا کالج میں جگہ ملی، میں وہاں چلا گیا۔ اس لیے اس کالج میں آکر آنے کے اعزاز کے ساتھ، مجھے آج اس تقریب میں شرکت کرنے اور آپ سب سے ملنے کا موقع ملا ہے۔ اس خصوصی تقریب میں آرگنائزیشن آف مسلم ایجوکیشن انسٹی ٹیوٹس اینڈ اسوسی ایشنس آف تمل ناڈو OMEIAT کے بانی 93 سالہ بزرگ پی کے شمیم احمد صاحب کو لائف ٹائم اچیومنٹ ایوارڈ پیش کرتے ہوئے ہم سب کو بہت فخر ہے۔ ہم ان کے اہل خانہ کے لیے شکر گزار اور مبارکباد پیش کرتے ہیں۔ یہ ایوارڈ نیو کالج کے سابق صدر آدم محمد خلیل کو بھی پیش کیا گیا جو 91 سال کی عمر میں بھی آرگنائزیشن آف مسلم ایجوکیشن انسٹی ٹیوٹس اینڈ اسوسی ایشنس آف تمل ناڈو OMEIAT کے صدر کی حیثیت سے اچھی کارکردگی کا مظاہرہ کر رہے ہیں۔ ہم ان کو اور ان کے اہل خانہ کو مبارکباد اور تحسین پیش کرتے ہیں۔ چنئی یونیورسٹی کے سابق وائس چانسلر قابل احترام انس صادق نے بھی یہاں ایوارڈ حاصل کیا۔ ہماری انہیں بھی مبارکباد اور تحسین۔ اس کے علاوہ، ہمیں 13 شخصیات کو لائف ٹائم اچیومنٹ ایوارڈ پیش کرنے پر بہت فخر ہے جن میں 12 اسلامی تعلیم کے اسکالرز بھی شامل ہیں۔ تعلیمی ادارے کو چلانا کوئی آسان کام نہیں ہے۔ لیکن، اگر آپ 50 سال سے تعلیمی اداروں کی فیڈریشن چلا رہے ہیں، تو یہ آپ کی محنت کی کامیابی ہے۔ یہ واقعی ایک چیلنجنگ چیز ہے۔ آپ اسے بالکل اور بہترین طریقے سے کر رہے ہیں۔ یہ بات قابل تعریف ہے کہ 1974 میں قائم ہونے والے اس کنسورشیم میں آج تقریباً 520 تعلیمی ادارے ہیں۔ آپ سب اسلامی تعلیمی اداروں کی آواز ہیں۔ یہ کہنا کوئی مبالغہ آرائی نہیں کہ آپ کی تنظیم حکومت اور اسلامی تعلیمی اداروں کے درمیان پل کا کام کرتی ہے۔

## اسٹالن نے تین زبانوں کے فارمولے پر دھرمیندر پردھان پر تنقید کی



## ہندوستان میں غیر قانونی قیام اور منشیات کا کاروبار، نائجیریائی باشندہ ملک بدر

## یورپی مسلح افواج کی تشکیل کا وقت آ گیا ہے: زیلنسکی




## لبنان نے ایرانی طیاروں کو امریکی انتباہ کے بعد روکا: سیکیورٹی ذرائع



# آرگنائزیشن آف مسلم ایجوکیشن انسٹی ٹیوٹس اینڈ اسوسی ایشنس آف تمل ناڈو OMEIAT کی گولڈن جوبلی تقریب منائی گئی



## تمام یرغمالوں کی رہائی کی ڈیڈ لائن ہے، اسرائیل کو فیصلہ کرنا ہے کہ وہ اب کیا کرے گا



## ٹرمپ-پیوتن ملاقات کی میزبانی کے پیچھے سعودی عرب کا عالمی اثر و رسوخ ہے: سابق امریکی مشیر

## IUML WOMEN'S WING NEW ELECTED STATE LEADERS

The Tamilnadu State General Body meeting of Women's Wing of Indian Union Muslim League was held at Sri Meenakshi Mahal Trichy on 16/02/25 in the presence of IUML National President Professor K.M.Kader Mohideen Ex MP, State General Secretary K.A.M.Mohammed Abubakar Ex MLA, State Treasurer M.S.A.Shajahan. More than 160 women delegates from 22 districts of Tamilnadu participated in the General Body Meeting. The list of elected of elected office bearers to the Tamil Nadu State Executive Committee was officially announced by the IUML National President. List of Tamilnadu State Women's Wing Office Bearers:

A.S.Fatima Muzaffar MC, Tamilnadu State President, General Secretary Advocate M.Aisha, Treasurer A.M.Zaitoon, Principal Vice President Mehar Nisha Shahul Hameed Ex MC Coimbatore, Vice President Mumtaj MC Thoothukudi, Vice President Ayesha Villupuram, Vice President Ayesha Malik Chennai, State Secretary Dr. Fairoz Trichy, State Secretary Engineer Sabura Begum Tenkasi, State Secretary Dr. Fathima Nisha Madurai, State Secretary Shamim Shahjahan MC Aaduthurai.

Nahida Khan Chennai, K. Sarmila Naseer Cuddalore, Aalima Shabana Thiruvannamalai, Shamim Begum Ayyampettai, Arifa Trichy, Ayesha Dharmapuri, Kamila Begum Emaneswaram, Faritha RavanaSamutram were appointed as the eight zonal Coordinators of TamilNadu.





## NASA INCREASES RISK LEVEL OF ASTEROID 2024 YR4, LIKELY TO HIT EARTH IN 2032

Asteroid 2024 YR4 has captured the attention of space scientists and the public due to concerns about a potential impact with Earth in 2032. With a predicted close approach on December 22, 2032, many are questioning the actual risk posed by this space rock. While NASA has acknowledged the asteroid's unusual trajectory, experts assure that the chances of a collision remain low.



**How big is asteroid 2024 YR4?**

The exact size of 2024 YR4 remains uncertain, but NASA estimates it to be between 130 and 300 feet (40 to 90 meters) in diameter, based on its brightness. The true size and composition will become clearer with further observations, particularly infrared scans and upcoming studies with advanced telescopes.

**Where is 2024 YR4 now?**

As of January 31, 2024, the asteroid was 48 million kilometers (30 million miles) from Earth, moving farther away in its orbit around the Sun. Given this distance, there is no immediate cause for concern. However, scientists are closely monitoring its trajectory to refine impact probability estimates.

**Will it hit Earth in 2032?**

NASA initially estimated a 1.2% chance of impact, which was later adjusted to 2.3%—still a very low probability. This means that out of every 43 times the asteroid crosses Earth's orbit, only one path could lead to a collision. NASA reassures that no other known large asteroid has a higher than 1% chance of impact, making 2024 YR4 a rare case but not an immediate danger.

NASA isn't taking any risks and plans a detailed study using the James Webb Space Telescope in March 2025. This research will provide a clearer picture of 2024 YR4's structure and refine predictions about its future path, further reducing uncertainties surrounding its impact potential.

## US, Russia forge ahead on peace talks, without Ukraine

U.S.President Donald Trump's administration said on Tuesday it had agreed to hold more talks with Russia on ending the war in Ukraine after an initial meeting that excluded Kyiv, a departure from Washington's previous approach that rallied U.S. allies to isolate Russian President Vladimir Putin.

As the 4-1/2-hour meeting in the Saudi capital was underway, Russia hardened its demands, notably insisting it would not tolerate the NATO alliance granting membership to Ukraine. Trump said he was more confident after the talks and he would probably meet with Putin before the end of the month.

"Russia wants to do something," Trump told reporters in Palm Beach, Florida. He brushed aside Ukraine's concern about being left out of the meeting and said Kyiv should have entered talks much earlier.

"I think I have the power to end this war," said Trump. The talks in Riyadh were the first time U.S. and Russian officials met to discuss ways to halt the deadliest conflict in Europe since World War Two. Ukraine has said it will not accept any deal imposed without its consent, and German Chancellor Olaf Scholz reiterated "there must be no decision over the heads of Ukraine."

Even before the talks took place, some European politicians accused Trump's administration of handing free concessions to Moscow last week by ruling out NATO membership for Ukraine and saying it was an illusion for Kyiv to believe it could win back the 20% of its territory now under Russian control.

U.S. National Security Adviser Mike Waltz told reporters in Riyadh that the war must come to a permanent end, and this would involve negotiations over territory.

"Just a practical reality is that there is going to be some discussion of territory and there's going to be discussion of security guarantees," he said.

High-level teams would begin talks on ending the conflict and would separately work to restore the countries' respective diplomatic missions in Washington and Moscow to ease the talks going forward, U.S. Secretary of State Marco Rubio said.

Rubio said he came away from the initial talks convinced that Russia was "willing to begin to engage in a serious process" but that reaching peace would involve concessions from all sides.

**RUSSIA OFFERS NO CONCESSIONS**

Russian officials did not mention offering any concessions and U.S. officials did not claim to have scored any in Tuesday's meeting, leading observers to doubt whether the talks would turn into serious peace negotiations.

Addressing Ukrainian and European concerns, Rubio said no one was being sidelined and any solution must be acceptable to all parties.

Rubio later spoke to the top diplomats of France, Germany, Italy, Britain and the EU to brief them on the talks, State Department spokesperson Tammy Bruce said.

Both sides said no date had been set for a meeting between Trump and Russian President Vladimir Putin, which both men say they want.

Ukrainian President Volodymyr Zelenskiy said he had postponed a visit to Saudi Arabia planned for Wednesday until next month. Sources familiar with the matter said the decision was made to avoid giving "legitimacy" to the U.S.-Russia talks. Kyiv says talks on how to end the war should not be held behind Ukraine's back.

Ukraine ultimately will have a vote on whether to accept a deal negotiated between Washington and Moscow, and could reject a bad one, cautioned Evelyn Farkas, executive director of the McCain Institute and a former senior Pentagon official. "In the worst case scenario, Ukraine will keep fighting. If their defences crumble, I don't think that the American people want to see those pictures on television and to be held responsible," Farkas said.

As European countries discuss the possibility of contributing peacekeepers to back any Ukraine peace deal, Russian Foreign Minister Sergei Lavrov said in Riyadh that Moscow would not accept deployment of NATO troops there, whatever flag they were operating under.

"Of course, this is unacceptable to us," he said. The comments by Lavrov signalled that Russia will keep pressing for further concessions in the negotiations. The opening encounter on Tuesday saw Lavrov and Kremlin foreign policy aide Yuri Ushakov - two veterans who have spent a combined 34 years in their current roles - negotiate with three Trump administration officials in their first month on the job.



## OMEIAT GOLDEN JUBLIE CELEBRATIONS

(Organization of Muslim Educational Institutions and Associations of Tamilnadu)
Inaugural Function of Golden Jubilee Celebrations 31st January, 2025

OMEIAT Golden Jubilee Celebrations was inaugurated in a grant manner by Hon'ble Thiru Udhayanidhi Stalin, Deputy Chief Minister of Tamilnadu.

Hon'ble Deputy Chief Minister released the first copy souvenir which was received by Hony. Govi Cheziyan, Minister for Higher Education Thiru Udhayanidhi Stalin presented Lifetime Achievement Awards to Thirteen Eminent educationists, Thiru Udhayanidhi Stalin, in his speech, highlighted the long bonding by the ruling party with Muslim Community and benefits that Muslims are enjoying over years by various schemes and policy decisions by ruling party in favour of Muslims. Thiru Udhayanidhi Stalin also mentioned the sleeve of orders passed by the DMK in this tenure by the Chief Minister of Tamilnadu for the benefit of Muslims recently and also said more benefits will be announced soon.




It was presided over by Mr. U. Mohamed Khalilullah, President, OMEIAT

Mr. S. Ahamed Meeran, General Secretary, OMEIAT welcomed the gathering.

Mr. Imthiaz Pasha, President, MEASI delivered felicitation address

Hon'ble Govi Cheziyan Minister for Higher Education, Mr. Nawas Kani, M.P., Chairman, Tamil Nadu Wakf Board and Mr. Abdul Samad MLA., President, Tamil Nadu Haj Committee also spoke in the function. Dr. S. Sathikh, Former Vice-Chancellor, University of Madras,

Former Gen. Secretary, OMEIAT spoke detailing the history of OMEIAT and its services to schools and colleges, Mr. Mohamed Haneef Katib, Hon Treasurer, OMEIAT delivered the vote of thanks

Mrs. Fathima Muzafer MLC was the Master of Ceremony of the function

The following eminent educationists were awarded Lifetime Achievement Awards:

1.Janab P K Shabbir Ahmed, Founder, OMEIAT, 2.Janab U Mohamed Khalilullah , President, OMEIAT & Former President , Muslim Educational Association of Southern India (MEASI), 3. Dr. S Sathikh, Former Vice Chancellor , University of Madras 4. Janab M M Hashim Chairman of KH Educational Foundation and Patron of MEASI, 5. Janab S Ziauddin Ahmed Chairman, C. Abdul Hakeem College of Engineering and Technology, 6. Janab M E S Fathu Rabbani, Correspondent, Sadakathullah Appa College, Tirunelveli, 7. Dr. A. M. Salahuddin, Former Vice President, Anjuman-e-Himayath-e-Islam, Chennai, 8. Mr. Shanmuga Velayutham Former Professor of Social Work at Loyola College, Chennai, 9. Mrs. Zubaida Azgar Ali Dhala Former President, Muslim Women Association (MWA), 10. Sister. Shariffa A Azeez Correspondent Crescent Group of Girls Institutions in Tamilnadu, 11. Mr. Mohamed Ashraf Chairman, MEASI Urdu Academy & Former Secretary, MEASI, 12. Janab P Nazeer Ahmed Former Principal, Osmania Hr. Sec. School, Thirapattur, 13. Janab EKM Muhammad Thaj Muhyideen Gani, E.K.M. Abdul Gani Madarsa Islamiyah Primary and High School, Erode.

Mr. S. Ahmed Meeran, General Secretary, OMEIAT, in his speech, appealed the Govt. of Tamilnadu to take steps fulfil the demands listed in memorandum submitted to Deputy Chief Minister. He mentioned a few in his speech as given below:

- The benefits such as the 7.5% reservation in professional courses given to Govt. School Students shall be extended to aided schools.
- There is a strong emphasis on the need for immediate teacher appointments for existing vacancies in aided schools, particularly in Urdu medium schools
- There is dire need for re-opening of Urdu teacher training institutions. The lack of qualified teachers in these schools hampers the quality of education, particularly in minority communities where Urdu is the medium of instruction.
- A major concern raised in the representation is the recent government order making Tamil a compulsory language for students in classes 9 and 10, while permitting students to study their mother tongue as an optional subject. This policy creates a disparity, with non-Tamil students required to take six subjects, totalling 600 marks, while Tamil students continue to study five subjects for a total of 500 marks. The community has expressed dissatisfaction with this unequal treatment and has called for a more equitable system.
- OMEIAT urging the government to grant permanent recognition to schools after ten years of service, simplifying the process to allow for faster institutional development.

## Telangana allows govt servants observing Ramadan to leave an hour early, BJP claims 'appeasement'

A day after the Congress government in Telangana issued an order allowing its Muslim employees to leave work an hour early for prayers during the month of Ramadan, the BJP accused it of "appeasement politics".

The February 17 order allowed all "Government Muslim Employees/ Teachers/Contract /Out-sourcing/Boards/ Corporations & Public Sector Employees working in the State to leave their Offices/Schools at 4.00 pm during the month of Ramzan from March 2 to March 31".

BJP IT Cell head Amit Malviya posted on X: "The appeasement bug strikes the Congress government in Telangana, which has approved relaxed work hours for Muslim state employees during Ramzan".



He posted: "No such concessions are ever granted to Hindus when they fast during Navratri. This tokenism isn't about being sensitive to the religious beliefs of one community but about reducing them to a mere vote bank. It should be opposed."

Adding to this, Telangana BJP MLA Raja Singh said that during Hindu festivals, no concession is given to believers. "If one community is given preference over the other, then it has to be appeasement politics," Singh said.

In Andhra Pradesh, where the BJP is in a coalition government with the Telugu Desam Party, a similar concession has been given to Muslim government servants. In an order dated February 22, the government allowed all Muslim government staff to leave office by 4 pm, just like Telangana.

The Telangana Congress, meanwhile, slammed the BJP for indulging in "politics of polarisation".

"During all festivals, the government gives concessions to believers of different faiths. During Dasara, a 13-day holiday was given by our government. The BJP has no idea about this because they are truly not caring about the welfare of people of Telangana," said Telangana Congress spokesperson Syed Nizamuddin. Even the previous BRS government had allowed this concession, Nizamuddin said.






பீஸ் வாய்ஸ்

Registrar of Newspaper for India No. TNMUL/2011/39024
Regd. Newspaper, Egmore RMS/1 Patrika Chennel, Regd. No. TN/CH(C)/457/12-14
RDis No 358/13

# நடு ரோட்டில் நடந்த கலைஞர் ஓடிச் சென்று அழைத்த எம்.ஜி.ஆர்

## வி.வி.கிரி மறைவின் போது திடீர் சந்திப்பு

காங்கிரஸ் கட்சியானது, தேசிய அளவில் சிண்டிகேட்' இன்டிகேட் என இரு பெரும் பிளவாக வெடித்துப் பிரிவதற்கு மூல காரணமாக இருந்தவர் வி வி கிரி. மூளை காரணமாக இருந்தவர் இந்திரா காந்தி. ஜனாதிபதி பதவிக்கான தேர்தலின் போது காங்கிரஸ் கட்சி சஞ்சீவ ரெட்டியைக் களமிறக்கியது. ஆனால் அப்போது இந்திரா காந்தி அந்த வேட்பாளரை விரும்பவில்லை. தனது ஆட்சி முறைகளுக்கு அவர் முட்டுக்கட்டையாக இருப்பார் என்று சந்தேகம் கொண்டார். ரெட்டி ஜனாதிபதியானால், காங்கிரஸ் கட்சியின் உயர் மட்டத் தலைவர்கள் இடையே செல்வாக்குப் பெருகி, முழுக்க முழுக்க தனது தலைமைக்கு எதிராக, அவர்கள் போர்க்கொடி தூக்கி விடுவார்களோ என்று இந்திரா காந்தி பயந்தார்.

எனவே அவர் நீலம் சஞ்சீவரெட்டியை எதிர்த்து ஒரு போட்டி வேட்பாளரைக் களம் இறக்கினார். அவர்தான் வி வி கிரி. ஜாகிர் உசேன் நமது நாட்டின் ஜனாதிபதியாக இருந்த போது, துணை ஜனாதிபதியாக இருந்தவர் விவி கிரி. அவர் இந்திரா காந்தியுடன் இணக்கமாகவும், விசுவாசமாகவும் நடந்து கொண்டார். எனவே தான் அவரையே ஜனாதிபதியாகக் கொண்டு வருவது என்று இந்திராகாந்தி தீர்மானித்தார்.

தமிழக வாழ்விடத்தைக் கொண்ட வி வி கிரியின் தேர்தல் களமாடலில் அவரே வென்றார். ஜனாதிபதி ஆனார். இந்திரா காந்தியின் பகிரங்கப் பிரச்சாரத்தின் காரணமாக, விவி கிரி வாகை சூடினார். "மனசாட்சிப்படி ஓட்டு போடுங்கள்" என்று காங்கிரஸ் எம்பி, எம்எல்ஏக்களுக்கு இந்திரா காந்தி வேண்டுகோள் விடுத்ததை



அடுத்து, அது தேசிய அளவில் சர்ச்சைக்கு வித்திட்டது. கட்சியோ வெடித்துச் சிதறியது. காங்கிரஸ் கட்சியின் அதிகாரபூர்வமான வேட்பாளரை எதிர்த்து, காங்கிரஸ் அமைச்சரவையை நடத்தி வந்த இந்திரா காந்தியே குறுக்குச் சால் ஓட்டியது வரலாறு சந்தித்த விபரீதம்.

விவி கிரி ஜனாதிபதியானால், தன் கட்டுப்பாட்டுக்குள் இருப்பார், தான் சொல்வதைக் கேட்பார் என்று இந்திரா காந்தி முழுமையாக நம்பினார். அந்த நம்பிக்கைக்குப் பாத்திரமானவராகவே விவி கிரி தனது பதவிக்காலத்தில் செயல்பட்டார். இது தொடர்பான நையாண்டிச் சொல்லாடல் ஒன்றை துக்ளக் ஆசிரியர் சோ தனது பத்திரிக்கையில் பிரசுரம் செய்ததை இங்கே சுட்டிக் காட்டலாம். அந்த கால கட்டத்தில் துக்ளக் இதழின் அட்டைப் படத்தில் ஒரு கார்ட்டூன் வெளியிடப்பட்டிருந்தது. ஜனாதிபதி மாளிகையில் இருந்து, ஜனாதிபதி விவி கிரி தொலைபேசியில் பேசுவது போல ஒரு பக்கமும், பிரதமர் அலுவலகத்தில் இருந்து பிரதமர் இந்திரா காந்தி அதே போன்று தொலைபேசியில் பேசிக்கொணடு இருப்பதாகவும் அந்த கேலிச் சித்திரம் வரையப்பட்டிருந்தது. வி வி கிரியும் இந்திரா காந்தியும் பேசிக் கொள்வது போன்ற சித்தரிப்பு தான் கார்ட்டூன் நோக்கம். அவர்கள் என்ன பேசிக் கொண்டார்கள் என்பது குறித்த கற்பனா வசனத்தை அந்த கார்ட்டூனில் சோ குறிப்பிட்டிருந்தார். அந்த உரையாடல் இதோ:

இந்திரா காந்தி: ஹலோ மிஸ்டர் சரி.... வி.வி.கிரி என் பெயர் சரி இல்லைங்க. கிரி. ஆனால் நீங்க என்ன சொன்னாலும் சரி.

இப்படித்தான் அந்த உரையாடல் வாசகம் வடிவமைக்கப்பட்டிருந்தது.

இந்திரா காந்தி என்ன சட்டத்தைக் கொண்டு வந்தாலும், 'ஓகே' என கண்ணை மூடிக்கொண்டு கையெழுத்துப் போடும் அளவுக்கு விவி கிரி சாதகமாகவே இருந்தார். அதை உணர்த்தும் வகையில் தான் அந்த கார்ட்டூன் அச்சிடப்பட்டு, வெளியாகி இருந்தது.

தொழிற்சங்கத்தின் தலைவர்கள் என்றால் புரட்சி முழக்கங்கள் எழுப்பியே பழக்கப்பட்டவர்கள் என்பதுதான் வரலாறு. சாத்வீக மொழியில் அரசியல் நடத்தி வந்த விவி கிரியோ, சாந்த சொரூபராக, அடங்கி ஒடுங்கிச் செயல்படும் ஜனாதிபதியாகவே செயல்பட்டார் என்பதே விநோத வரலாறு.

இந்த தேர்தலை அடுத்து காங்கிரஸ் கட்சி உடைந்தது. காங்கிரஸின் மூத்த தலைவர்கள் ஒருங்கிணைந்து இயக்கிய அமைப்புக்கு சிண்டிகேட் காங்கிரஸ் என்று, செய்தியாளர்கள் பெயரைக் குறிப்பிட்டு எழுதத் தொடங்கினர். ஸ்தாபன காங்கிரஸ் என்பது அதிகாரபூர்வமான கட்சிப் பெயர்.

இந்திரா காந்தி தன் ஆதரவாளர்களை ஒருங்கிணைத்து நடத்திய கட்சியை இண்டிகேட் என்ற பெயரால் செய்தியாளர்கள் களமாடி வந்தனர். அந்த கால கட்டத்தில், தமிழகத்தில் எந்த காங்கிரஸ் தலைவரைப் பார்த்தாலும் செய்தியாளர்களாகிய நாங்கள் கட்டாயம் ஒரு கேள்வியை வழக்கமாக்கி வைத்திருந்தோம். ஒரு முறை சின்ன அண்ணாமலை எங்களிடம் சிக்கிக் கொண்டார். அவரிடமும் இதே கேள்வியைத்தான் கேட்டேன்.

அவரின் பதில் எங்களுக்குத் தெளிவைத் தரவில்லை. குழப்பத்தான் வைத்தது. அது இதோ: நிருபர்: சார் நீங்கள் சின்டிகேட்டா... இன்டிகேட்டா? சின்ன அண்ணாமலை: அதுதான் எனக்கு டெலிகேட் ஆக இருக்கிறது. அப்போதைய காலகட்டத்தில் காங்கிரசார் இப்படித்தான் குழப்பமான நிலையில் இருந்து வந்தார்கள்.

பிரம்மானந்த ரெட்டி தலைமையில் சிண்டிகேட் காங்கிரஸ், அரசியல் நடத்தியது. ஸ்தாபன காங்கிரஸ் என்று அதற்குப் பெயரிடப்பட்டது. காமராஜர் அந்த கட்சியின் முக்கியத் தலைவராக தேசிய அளவில் அறியப்பட்டார்.

இந்திரா காந்தி இன்டிகேட் காங்கிரசை வழி நடத்தினார். ஒரு காலகட்டத்திற்குப் பிறகு அந்தக் கட்சியை இந்திரா காங்கிரஸ் என்று செய்தியாளர்கள் குறிப்பிடத் தொடங்கினர். தேர்தல் கமிஷனில் அகில இந்திய காங்கிரஸ் கட்சி (ஆர்) என்ற பெயரில் பதிவு செய்யப்பட்டு அங்கீகாரமும் பெறப்பட்டது.

அப்போதெல்லாம் டி என் சேஷன் தேர்தல் கமிஷனின் பொறுப்பில் இல்லை. எனவே இந்திரா காந்தி நினைத்ததை முடித்துக் காட்ட முடிந்தது.அந்த சூழலில் சென்னைக்கு வந்திருந்த சிண்டிகேட் காங்கிரஸ் தலைவர் பிரம்மானந்த ரெட்டி, சின்ன மலை அருகே இருந்த திருமண மண்டபத்தில் கட்சியின் முக்கிய பிரபலங்களோடு ஆலோசனை நடத்தினார்.

அந்தக் கூட்டத்தில் அடியேனும் ரகசியமாகப் பங்கேற்றுச் செய்தி எழுதியிருக்கிறேன்.

வி.வி.கிரி பற்றிய அரசியல் பின்னணிகள் இங்கே அலசப்படுவதற்குக் காரணம் உண்டு. ஜனாதிபதி பதவியை நிறைவு செய்து முடித்தவராக வி.வி.கிரி ஓய்வு பெற்று, சில ஆண்டு காலம் வாழ்ந்து வந்தார். வயது மூப்பு மற்றும் உடல் தடிப்புக் காரணமான அவர் 1980 ஜூன் 23ல் சென்னையில் மரணம் அடைந்தார். அவரின் வீடு தி. நகர் ஜி என் செட்டி சாலையில் உள்ள கிரி தெருவில் தான். அங்கு தான் அவரின் உடல் கிடத்தப்பட்டு இருந்தது. இறுதிச் சடங்குகள் சென்னையில் தான நடைபெற்றன.

வி.வி.கிரி உடலை நல்லடக்கம் செய்யும் சுடகாட்டு மையத்தில் ஏராளமான விவிஐபிக்கள் குழுமி இருந்தனர். முப்படைத் தளபதிகளும் அவர்களில் அடக்கம். அவர்களோடு செய்தியாளர் என்ற வகையில் அடியேனும் இருந்தவனாகச் செய்திகளைத் தொகுத்து எழுதினேன். ஜனாதிபதியாக இருந்து ஓய்வு பெற்ற ஒருவரின் இறுதிச் சடங்கின் போது மத்திய அரசாங்கம் எத்தகைய சடங்குகளை எல்லாம் செய்யும் என்பதை நான் அப்போதுதான் நேரடியாகக் கண்டு, தெளிவு பெற்றேன்.

வி வி கிரியின் இறுதிச் சடங்குகள் தொடர்பான அறிவிப்பு வெளியானதும் அதன் முழு பொறுப்பையும் தேசிய அரசாங்கத்தின் விதிமுறைப்படி, ராணுவம் ஏற்றுக் கொண்டது.

விவி கிரியின் உடல் இறுதிப் பயணத்திற்குத் தயாரான நிலையில்

பிவி கிரியின் வீட்டுக்கே சென்று இறுதி அஞ்சலி செலுத்தலாம் என்ற எண்ணத்தோடு தன் காரில் அண்ணா அறிவாலயத்தில் இருந்து கருணாநிதி கிளம்பிச் சென்றார். அண்ணா மேம்பாலம் அருகே ஏராளமான கூட்டம் குழுமி இருந்தது. இதனால் வாகனங்கள் நகர முடியாத அளவுக்கான ஜன நெரிசல் காணப்பட்டது.

சடங்குக்கான நேரமோ நெருங்குகிறது. வாகனத்துக்கோ வழி இல்லை .

என்ன செய்வது என்று சில நிமிடங்கள் யோசித்த கருணாநிதி, காரை விட்டுச் சாலையில் இறங்கினார். கிரி தெருவை நோக்கி நடக்கத் தொடங்கினார்.

இதே நேரத்தில் முதலமைச்சர் எம்ஜிஆரின் கார், அண்ணா மேம்பாலம் அருகே வந்தது. குதிரை வீரன் சிலை இருக்குமிடம் வரையிலும் வந்த அவரின் கார், திரள் கூட்டம் காரணமாக நகர முடியாமல் நின்றது .

ஆகவேதான் ஒருபுறம் எதிர்க் கட்சித் தலைவர் கருணாநிதியின் காரும், மறு புறம் முதல் அமைச்சர் எம்ஜிஆரின் காரும் தடுத்து நிறுத்தப்பட்டு விட்டன.

காரில் அமர்ந்திருந்த எம்ஜிஆர் என்ன செய்வது என்று யோசிக்கத் தொடங்கினார். அதற்குள் காவல்துறை அதிகாரிகளின் உரிய முன்னெடுப்புகளுக்குப் பிறகு, முதலமைச்சரின் கார் அந்த வழியில் செல்ல அனுமதிக்கப்பட்டது.

அந்த கார் புறப்படுவதற்கு முன்னதாகவே, காரில் அமர்ந்தபடியே இருந்த அவரின் பார்வையில் கருணாநிதி பட்டுவிட்டார். கலைஞர் சாலையில் நடந்து போவதைப் பார்த்ததும், எம்ஜிஆர் புரிந்து கொண்டார்.

உடனே காரை விட்டு இறங்கிய எம்ஜிஆர், வேகமாகச் சென்று, கருணாநிதியைப் பிடித்து விட்டார். விரிந்து பரந்த அந்த மையச் சாலையில், வாகன நடமாட்டம் ஏதும் இல்லாத நிலையில், இருவர் மட்டும் சந்தித்துக் கொண்டு, பழைய கால நிகழ்ச்சிகளைச் சிந்தித்துக் கொண்டனர்.

பின்னர் கருணாநிதியை அழைத்துக் கொண்டு, தன் கார் வரை வந்த எம்ஜிஆர்,

அவரையும் தன் காரில் ஏற்றிக்கொண்டு நேரே கிரி தெருவுக்குப் புறப்பட்டு விட்டார்.

களத்துக்கு வந்து நின்ற காரில் இருந்து எம்ஜியாரும், கருணாநிதியும் ஒரு சேர இறங்கி வந்ததைக் கண்டு அங்கு குழுமி இருந்தோர் வியப்பால் விக்கித்துப் போயினர். அத்தகு மாந்தர்களுள் அடியேனும் ஒருவன் என்பதுதான் என் இதழியல் அனுபவத்தின் மற்றொரு ருசிகரச் சிகரம்.

அரசியல் மார்ச்சரியங்கள் ஆயிரம் இருந்தாலும், தனிப்பட்ட முறையில் பரஸ்பரம் பாசப் பரிவர்த்தனை செய்து கொண்ட அந்த நேச நெருக்க நெஞ்சினர், நாட்டு நாயகர்களாய் அரசியல் அரங்கின் நினைவுகளில் நிழலாடுகின்றனர்.

எம்ஜிஆரின் பிறந்த நாளை ஒட்டிய திருவிழாக் கோலத்தின் ஒரு கட்டமாக, நேரடியாக அடியேன் அனுபவித்த இந்த காட்சியை ஆவணப்படுத்தி இருக்கிறேன்.

வெட்ட வெளிச் சாலையில் எம்ஜிஆரும் கருணாநிதியும் சந்தித்துக் கொண்டது என்பது அரசியல் களத்தின் ஆக்கபூர்வ அம்சமாகும். இதனை நிரூபிப்பதற்கு, வரலாறு ஒரு வேலையைச் செய்து விட்டது.

வி வி கிரியின் இறுதிச்சடங்கில் கலந்து கொள்ளச் சென்ற எம்ஜிஆரும், கருணாநிதியும் மக்கள் கூட்டம் காரணமாகத் தடுத்து நிறுத்தப்பட்டது போன்றே, மற்றொருவரும் இதே நிலைக்கு இலக்கானார். அவர் பெயர் ராஜேந்திரன். தினகரன் நாளிதழின் தலைமைப் புகைப்பட நிபுணர். கிரி தெருவை நோக்கி அவர் ஆட்டோவில் சென்று கொண்டிருந்த போது, அவரின் வாகனமும் மறித்து நிறுத்தப்பட்டது. சாலையில் இறங்கி ஓடிச் சென்று விடலாம் என்று கேமரா சகிதம் ராஜேந்திரன் அங்கு இறங்கிய போது தான் எம்ஜிஆரும் கருணாநிதியும் சாலையின் நடுவே சந்தித்துக் கொண்ட காட்சியைப் பார்த்தார். அவர் மின்னல் வேகத்தில் பாய்ந்தோடிய போது, இரு ஆளுமைகளும் எம்ஜிஆர் காரில், பின் சீடடில் ஏறிவிட்டனர்.

அப்போது முன்சீட்டில் கடுகடுத்த முகத்தோடு நெடுஞ் செழியன் அமர்ந்திருந்தார். இந்த காட்சியை ராஜேந்திரன் கிளிக் செய்து விட்டார்.தினகரன் நாளிதழில் மறுநாள் மிகப் பெரிதாக அந்த படம் எக்ஸ்க்ளூசிவ் என்ற தகுதியோடு பிரசுரம் ஆனது. தினகரன் நாளிதழின் வெள்ளிவிழாச் சிறப்பு மலரில் இந்த படமும் இடம் பெற்று இருக்கிறது.

இந்த சிறப்பு மலர் தற்போது அண்ணா அறிவாலயத்தில் உள்ள கலைஞர் கருவூலத்தில் காட்சிக்கு வைக்கப்பட்டு இருக்கிறது. ஆர்வமிருப்போர் அண்டிச் சென்று, கண்டு மகிழலாம்.

ஆர்.நூருல்லா, செய்தியாளன்

Owned, Published & Printed by : Muzaffer Ahmed Published from 5/1, Habibullah Road, T.Nagar, Chennai - 600 017 Printed at JM Process, 29, V.N.Dass Road, Border Thottam, Mount Road, Chennai - 600 002. Editor: FATHIMA MUZAFFER